டைரக்டரின் கீழ் இருக்கின்றன. முதன்மையான வேலை பள்ளிக் கூடங்களைப் பார்ப்பது; இரண்டாம்பட்ச வேலை நூலக வேலை. ஆனால் முழுமையாக, தனித் தனியே பிரித்துக் கொண்டே போனால் அனாவசியமாக சிப்பந்திகள் போட வேண்டியிருக்கும்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : தேச பக்தியை வளர்க்கக் கூடிய அளவுக்குக் குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கும் வகையில் பாடத் திட்டத்தில் மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றனவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது தொடர்ந்து கவனம் செலுத்தப்பட்டு வருகிற விஷயம்.

திரு. கே. ஏ. மதியழகன் : இப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கும் அமைப்பில் டைரக்டர் ஆப் ஹையர் எஜுகேஷன் அவர்களுக்கும் இன்னொரு டைரக்டர் அவர்களுக்கும் இருக்கிற உறவு முறைகள் என்ன ? இரண்டு பேரும் தனித் தனியாக அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டவர்களா அல்லது டைரக்டர் ஆஃப் ஹையர் எஜுகேஷனுக்கு மற்றொரு டைரக்டர் கட்டுப்பட்டவரா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : டைரக்டர் ஆஃப் செகண்டரி எஜுகேஷன், டைரக்டர் ஆப் ஹையர் எஜுகேஷன் இரண்டு பேரும் ஒருவருக்கு மற்றொருவர் கட்டுப்பட்டவர் அல்ல. இரண்டு பேரும் நேராக அரசாங்கத்தோடு தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும்.

திரு. கே. ஏ. மதியழகன் : இதே முறையிலே வேறு இலாகாக் களை குறிப்பாக மருத்துவ இலாகாவைப் பிரிக்க சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது அந்தந்த இலாகாக்களின் நிலைமையை ஒட்டிச் செய்வது. மருத்துவ இலாகாவைப் பொறுத்த வரை டைரக்டர் ஆஃப் ஹெல்த், டைரக்டர் ஆஃப் மெடிகல் சேர்விஸஸ் என்று இரண்டு பிரிவாக இருக்கிறது. அந்த இரண்டையும் இணைப்பது நல்லது என்ற அபிப்பிராயம் இப்போது இருந்து வருகிறது.

உயர்தரக் கல்விக்கான கடன் வழங்குதல்

* 237 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) உயர்தரக் கல்விக்காக ஏழை மாணவர்களுக்குக் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் ஜில்லாவாரியாக எத்தனை பேர் பய னடைந்திருக்கிறார்கள் ?

(இ) மொத்தம் வந்த விண்ணப்பங்கள் எத்தனை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) A statement [a] is placed on the table of the House.

[a] Printed as Appendix I on pages 123–124 infra.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஜில்லாவாரியாக இவ்வகைக்காக வழங்கப்பட்டிருக்கிற தொகை விவரத்தை அறிவிக்க முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் விவரங்களிலிருந்து விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டதற்கும், ஸ்காலர்ஷிப் வழங்கப்பட்டதற்கும் உள்ள நிலையை ஒத்துப் பார்க்கும்போது விவசாயக் கல்லூரியில் படிக்கக் கூடிய மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் விகிதாச்சார ஸ்காலர்ஷிப் அளவு குறைவாக இருக்கிறது. கால நிலைமையை உத்தேசித்து, விவசாயம், கால்நடைக் கல்லூரி மாணவர்களுக்கு அதிகப்படியான எண்ணிக்கையில், முடிந்தால் கோரும் எல்லோருக்கும் ஸ்காலர்ஷிப் வழங்க அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : விவசாயக் கல்லூரி இதுவரை ஒன்றுதான் இருந்து வந்தது. கால்நடைக் கல்லூரி ஒன்றுதான் இருக்கிறது. அந்த வகையில் அதிகமான மாணவர்கள் இல்லை என்பதைக் கனம் அங்கத்தினர் உணர்ந்து கொள்ளுவார்கள். மற்றக் கல்லூரிகளின் மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. அதற்கேற்றவாறு அதிகமாகக் கொடுக்கப்படுகிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : இந்தக் குறிப்பிலேயிருந்து நீலகிரியில்
11–00 a.m. ஒரே ஒரு மாணவருக்குத்தான் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்று தெரிகிறது. அதிக விண்ணப்பங்கள் வரவில்லையா அல்லது விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றனவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப் பற்றியெல்லாம் தனியாக விவரங்கள் கேட்டால் சொல்லலாம். அல்லது கனம் அங்கத்தினரிடம் யாராவது தகுதியுள்ளவர்களுக்கு, நீலகிரியைச் சார்ந்தவர்களுக்கு, இந்த ஸ்காலர்ஷிப் வழங்கப்படவில்லை என்ற தகவல் இருந்தால் அதைத் தெரிவிக்கலாம்.

திரு. து. ப. அழகமுத்து : இந்தக் கடன் தொகை வழங்குவதற்கு மாணவர்கள் எவ்வளவு மார்க் பெற்றிருந்தால் அவர்களுக்கு இந்தக் கடன் தொகை வழங்கப்படுகிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது மத்திய அரசாங்கம் வழங்குகிற கடன் தொகை. 100-க்கு 60-க்குக் குறையாமல் வாங்க வேண்டுமென்ற விதி அகில இந்தியாவிற்கு இருந்து வந்திருக்கிறது. ஆனால் அதைக் குறைக்கவேண்டுமென்று மத்திய அரசாங்கத்தைக் கேட்டோம். ஏனெனில் இங்குள்ள பல்கலைக் கழகத்தின் ஸ்டான்டர்ட் அதிகமாக இருக்கிறது. ஆகவே, 60 என்பதை 55 ஆக ஆக்கவேண்டுமென்று கேட்டு வற்புறுத்திக் கொண்டிருந்தோம். இப்போது அதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இப்போது கொடுக்கக்கூடிய உதவித் தொகை கடனாகக் கொடுக்கப்படுகிறது. நிறைய மார்க்குகள் வாங்குகிறவர்கள் தங்களுடைய தகுதி காரணமாக இரண்டாகவே பெற்று விடுகிறார்கள். ஆகவே, குறைந்த மார்க் வாங்கியிருந்தவர்களாக இருந்தாலும் கடனாகக் கொடுக்கப்படுகிற காரணத்தால் அந்த மார்க் விகிதத்தைக் குறைத்து, 40 மார்க்குகள் வாங்கினாலும் கடனாகக் கொடுக்க உத்தரவாதம் தரப்படும் என்றளவிற்காவது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மத்திய அரசாங்கம் கொடுக்கிற திட்டம், இது. அதற்கு ஓரளவு பணம் ஒதுக்கி வைத்து எல்லா மாநிலங்களுக்கும் வழங்குகிறார்கள். கொஞ்சம் தரமுள்ள மாணவர்களுக்குக் கிடைக்கவேண்டும், அப்போதுதான் போதுமானபலன் அளிக்கும் என்ற வகையில் குறைந்தபட்ச மார்க் விதிக்கப்பட்டிருக்கிறது. முன்பே கூறியதுபோல் 60 என்பது 55 ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் குறைப்பதற்கு உத்தேசமில்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத்தலைவர் அவர்களே, மாணவர்களுக்குக் கடன் கொடுப்பது என்பது ஆண்டு தோறும் இவ்வளவுதான் கொடுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்ட தொகை ஒதுக்கப்படுகிறதா ? அல்லது தகுதியுள்ள விண்ணப்பங்கள் அத்தனைக்கும் தரலாம் என்று விதி இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இவ்வளவு பணம் என்று ஒதுக்குகிறார்கள். அந்தப் பணத்தை மாநிலங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்கள். எவ்வளவு மாணவர்கள் என்று தேர்ந்தெடுத்து அதற்கேற்ற வகையில் இந்த இந்த மாணவர்களுக்குக் கொடுக்கலாம் என்று இந்த அரசாங்கம் சிபார்சு செய்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : இந்தக் கடன் கொடுத்திருப்பதில் கோவை மாவட்டத்திற்கு 335 என்றும், வட ஆற்காடு மாவட்டத்திற்கு 72 என்றும் இருக்கிறது. வட ஆற்காடு மாவட்டம் பொருளாதாரத் துறையில் பின்தங்கிய மாவட்டம். அதற்குக் கடனாகக் கொடுக்கும் தொகை குறைந்திருக்கிறது. கோவை மாவட்டம் செல்வந்தர்கள் வாழும் மாவட்டம். அங்கு அதிகமாக இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வட ஆற்காடு மாவட்டத்தில் கல்லூரிகள் மிகவும் குறைவு. அதிலும் ப்ரொஃபெஷனல் கல்லூரியே இல்லை. கோவையில் எல்லாம் இருக்கின்றன. அதுதான் காரணம்.

Evening Colleges

* 238 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that there has been poor response from women for the Evening College for Women at Madras;